# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 217/மா/2023**
**நாள் : 27.09.2023**

திரு. A. போஜியா,
சென்னை – 600 041. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம்-13, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, திருவான்மியூர், திருவள்ளுவர் நகர், நேதாஜி அபார்ட்மென்ட்ஸ், H60/G4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. போஜியா என்பவரின் 8.5.2023 நாளிட்ட மனு 10.5.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 217/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, திருவான்மியூர், திருவள்ளுவர் நகர், நேதாஜி அபார்ட்மென்ட்ஸ், H60/G4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. போஜியா தனது முறையீட்டு மனுவில்,

"Ward 180, AE, AEE, EE (South) அவர்களால் அவர்களிடம் உள்ள அதிகாரத்தால் வாழ்வு இழந்து, வருமானம் இழந்து, தூக்கம் இழந்து, நிம்மதி இழந்து, நிர்கதியாய் தங்களின் மூலம் பரிகாரம் தேடி நிற்கின்றேன். எனது இழப்பு Corporation அதிகாரிகளின் மூலம் சுமார் 2 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்கின்றேன்.

**AE, AEE, EE அவர்களின் அணுகுமுறை வரிசைப்படுத்தி கொடுக்கின்றேன்.**

1) வரைப்படம், 25.06.2018 கடிதத்தின் மூலம், S3, S4, S5 ஆகிய வீடுகள் 25.8.2018 AE, AEE, EE, Zonal அதிகாரிகளால் அடையாளப்படுத்தி, விதிமீறல் கட்டிடம் என மூன்று அடுக்குமாடி பூட்டி சீல் வைக்கப்பட்டு, தகவல் ஆணையத்தில் புகார் கொடுத்தார். அதற்கும் பதில் அளித்து, De-Seal செய்ய Hon'ble High Court அணுகினால் Urban Developmentக்கு போய் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு போட்டு, அங்கே விசாரித்து அந்த முடிவிற்கு AE, AEE, EE, ஆகியோர் Hon'ble High Court De-Seal

உத்தரவு மதிக்காமல், CMDA கடிதத்திற்கும் மதிக்காமல் சென்னை Corporation Senior Law Officer, Oral instruction செய்ததை மனதில் புரிந்துகொண்டு AE, AEE, EE (South) அதிகாரம் மிக்க பதவியில் இருக்கின்றனர்.

இந்த அதிகாரிகளால் பொதுவாக கெட்ட பெயர் ஏற்படுத்தியும், வீட்டை S3, S4, S5 ஆகிய வீடுகளை வாடகைக்கு விடாமலும், பல தொல்லைகள் கொடுத்து வாழ விடாமல் செய்கின்ற காரணத்தினால் எனக்கு நிவாரணமாக 2 கோடி ரூபாய் கொடுக்க உத்தரவு போடுமாறும், இவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் ஆணையிட வேண்டுகின்றேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 13, மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 12.08.2023 நாளிட்ட அறிக்கையில்:**

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-36, கோட்டம் -180 திருவான்மியூர், திருவள்ளுவர் நகர் 2வது மெயின் ரோடு, மனை எண்.B9, A2, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மனை பிரிவின் கட்டமைக்கப்பட்ட மனை என்றும், திருமதி D.R. சுமதி அவர்கள் பத்திரப்பதிவு எண்.2238-1999ன் வாயிலாக இந்த மனையை வாங்கி, சென்னை மாநகராட்சி நகரமைப்பு பிரிவு எண்.1409-1999 நாள்:14.09.1999ன்படி தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டுமான வரைப்பட அனுமதி பெற்றுள்ளார். ஆனால், இக்கட்டிடம் விதி மீறலுடன் திருமதி D.R. சுமதி அவர்களால் கட்டமைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்விதிமீறல் கட்டிடம் மீதான புகாரின் அடிப்படையில் இக்கட்டிட உரிமையாளர்களுக்கு கட்டிட வரைபட அனுமதி கோரும் தாக்கீது எண்.5634/2015ன்படி நாள்: 25.08.2014 அன்றும், கட்டிடத்தை பூட்டி சீல்வைக்கும் தாக்கீது எண்.5634/2015ன்படி நாள்:06.01.2016 அன்றும் வழங்கப்பட்டுள்ளது என்றும் விதிமீறல் தாக்கீதுகளை எதிர்த்து தரைதளத்தில் உள்ள 4 கடைகளின் உரிமையாளர்கள் திரு. எடிசன் மற்றும் ஐவர் உள்ளிட்டோர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த நீதிமன்ற வழக்குகள் எண்.W.P.No.9713 முதல் 9718/2016 மீதான 17.03.2016 நாளிட்ட நீதிமன்ற தீர்ப்பாணையின்படி தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகரமைப்பு வளர்ச்சித் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் விசாரணை மற்றும் ஆணையின்படி இந்த கட்டிடம் 28.02.1999ற்கு முன் கட்டமைக்கப்படாததால் மனுதாரர் மேல்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது என்றும், மேலும் கட்டிடத்தை காலிசெய்யும் தாக்கீது எண்.5634/2015 நாள்: 30.05.2016 மற்றும் 10.11.2016 ஆகிய நாட்களில் வழங்கப்பட்டது. கட்டிடத்தை பூட்டி சீல் வைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் கடும் எதிர்ப்பின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டன. மேலும் மனுதாரர் திரு. போஜையா தொடர்ந்த வழக்கு எண்.W.P.No.5531/2020 வாயிலாக தனது பிளாட்டினை சீல் அகற்ற வழக்கு தொடர்ந்தார். அதன் தீர்ப்பாணை மனுதாரருக்கு உரிமையான S3, S4 மற்றும் S5 பிளாட்களை பூட்டி சீல் வைத்ததை அகற்ற ஆணையிட்டதன் அடிப்படையில் 30.09.2020 நாளன்று சீல் அகற்றப்பட்டது என்றும், மேலும் அக்கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டது என தெரிந்தே மத்திய அரசு துறையில், பொது மேலாளராக பணி புரிந்து ஓய்வு பெற்ற திரு. போஜையா அவர்கள் 2ம் தளத்தில் S3, S4, S5 ஆகிய குடியிருப்புகளை வாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், இக்கட்டிடத்தில் திரு. போஜையா அவர்களை தவிர மற்ற உரிமையாளர்கள் பல்வேறு வழக்குகளை நீதி மன்றத்தில் தொடர்ந்த வண்ணம் இருந்ததால் இக்கட்டிடத்தின் மீது எவ்வித

நடவடிக்கையும் எடுக்க இயலாத சூழ்நிலை நிலவி வந்தது எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி முதுநிலை சட்ட ஆலோசகர் ஆலோசனைப்படி நகரமைப்பு விதிகளின்படி அனைத்து குடியிருப்புகளுக்கும் தாக்கீது வழங்கியதை எதிர்த்து அனைத்து குடியிருப்புவாசிகளும் நீதிமன்ற அவமதிப்பு தாக்கீது வழங்கியதை அடுத்து அமலாக்க நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக திரு. A.V. பரமகுரு மற்றும் V.P. கீதாராணி ஆகியோர் தொடர்ந்த நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.23782-2021 and W.M.P.No.25045-2021ல் வழங்கிய இடைக்கால தீர்ப்பாணையில் தற்போதைய நிலையை தொடர அறிவுறுத்தப்பட்டது. மற்றொரு குடியிருப்பு உரிமையாளர் திருமதி.காந்திமதி தொடர்ந்த நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.28509 of 2021, திருமதி. K. ரேவதி அவர்கள் தொடர்ந்த நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.2101/2021 வழக்குகளிலும் நீதியரசர்கள் பல வழக்குகளின் தொகுப்புகளாக இருப்பதால், ஒரே வழக்காக விசாரிக்கும் வகையில் தற்போதைய நிலையை தொடர அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் மேலும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் இக்கட்டிட மேல்முறையீட்டு மீதான இறுதி ஆணை மற்றும் இவ்விதிமீறல் கட்டிடம் எதிரான அனைத்து வழக்குகளின் இறுதியாணை மேல் நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டது என்றும் திருமதி. கீதா ராணி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 30.06.2022 நாளிட்ட ஆணையின் மீது அரசு முதன்மைச் செயலர், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அவர்களுக்கு 14.10.2022 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இம்மேல்முறையீட்டு மனு இதுநாள் வரை நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, தமிழக அரசின் விதிமீறல் கட்டிடங்களை பிரிவு 113-C, தமிழ்நாடு நகர்புற (ம) ஊரக நகரமைப்பு சட்டம் 2017 விதிகளின்படி வரன்முறை செய்வது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின் அடிப்படையில் பிளாட் எண்.B9, A2 குரு காம்ப்ளக்ஸ், திருவள்ளுவர் நகர் 2வது பிரதான சாலை, திருவான்மியூர் சென்னை-41ல் அமைந்துள்ள கட்டிடத்தின் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்."

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 23.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 07.8.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 23.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"Ward 180, AE, AEE, EE (South) அவர்களால் அவர்களிடம் உள்ள அதிகாரத்தால் வாழ்வு இழந்து, வருமானம் இழந்து, தூக்கம் இழந்து, நிம்மதி இழந்து நிர்கதியாய் தங்களின் மூலம் பரிகாரம் தேடி நிற்கின்றேன். எனது இழப்பு Corporation அதிகாரிகளின் மூலம் சுமார் 2 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்கின்றேன்.

<u>AE, AEE, EE அவர்களின் அணுகுமுறை வரிசைப்படுத்தி கொடுக்கின்றேன்</u>

1) S3, S4, S5 ஆகிய வீடுகள் 25.8.2018 AE, AEE, EE, Zonal அதிகாரிகளால் அடையாளப்படுத்தி, விதிமீறல் கட்டிடம் என மூன்று வீட்டை மட்டும் இது (G+3) அடுக்குமாடி வீட்டு கட்டிடம் என அதிகாரம் செய்து பூட்டி சீல் வைக்கப்பட்டு, தகவல்

ஆணையத்தில் புகார் கொடுத்தார். அதற்கும் பதில் அளித்து, De-seal செய்ய Hon'ble High Court அனுகினால் Urban Development-க்கு போய் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு போட்டு, அங்கே விசாரித்து அந்த முடிவிற்கு AE, AEE, EE, ஆகியோர் Hon'ble High Court De-Seal உத்தரவு மதிக்காமல், CMDA கடிதத்திற்கும் மதிக்காமல் சென்னை Corporation, Senior Law Officer, Oral instruction செய்ததை மனதில் புரிந்துகொண்டு AE, AEE, EE (South) அதிகாரம் மிக்க பதவியில் இருக்கின்றனர்.

இந்த அதிகாரிகளால் பொதுவாக கெட்ட பெயர் ஏற்படுத்தியும், வீட்டை S3, S4, S5 ஆகிய வீடுகளை வாடகைக்கு விடாமலும், பல தொல்லைகள் கொடுத்து வாழ விடாமல் செய்கின்ற காரணத்தினால் எனக்கு நிவாரணமாக 2 கோடி ரூபாய் கொடுக்க உத்தரவு போடுமாறும், இவர்களிடம் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் ஆணையிட வேண்டுகின்றேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -13, செயற்பொறியாளர் 23.8.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, பகுதி 38, கோட்டம் 180 திருவான்மியூர், திருவள்ளுவர் நகர் 2வது மெயின் ரோடு, மனை எண் A2, B9 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மனைப் பிரிவின் கட்டமைக்கப்பட்ட மனையாகும். இம்மனையை திருமதி சுமதி என்பவரால் வாங்கப்பட்டு, அதில் அபார்ட்மெண்ட் வடிவில் வீடுகள் கட்டப்பட்டு, மேற்கண்ட வீடுகள் தனியாருக்கு விற்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரருக்கு 3 வீடுகள் சொந்தமானதாகும். மேற்கண்ட கட்டடம் விதிகளை மீறி கட்டப்பட்டதால், அங்கிருந்த வீடுகளுக்கு பூட்டி சீல் வைக்கும் தாக்கீது 6.1.2016 அன்று வழங்கப்பட்டு, பின்னர் நீதி மன்றத்தின் உத்தரவிற்கிணங்க De-seal செய்யப்பட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட De Seal–ன் போது மனுதாரரின் 3 வீடுகளும் திறந்து விடப்பட்டன. இதற்கான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும், இம்முறை மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர், மண்டல அலுவலர், மண்டலம் 13 அவர்களின் 12.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

**4. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது எழுத்துபூர்வ வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளர் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13, பகுதி-33, கோட்டம் 180, திருவான்மியூர், திருவள்ளுவர் நகர் 2வது மெயின் ரோட்டில், மனை எண்.B9, A-2ல் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு, இரண்டாவது தளத்தில் பிளாட் வாங்கியிருப்பதாகவும், அடுக்கு மாடி குடியிருப்பு கட்டடம், பெருநகர மாநகராட்சியின் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதால் தன்னுடைய வீடுகள் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் எனவே அக்கட்டடத்தை இடித்துவிட்டு தனக்கு ரூ.2.00 கோடி இழப்பீடாக வழங்குமாறு கோரியுள்ளார்.

இந்நேர்வில் மனுதாரர் தொடர்ந்த வழக்கு எண்.W.P.No.5531 of 2020ல், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 21.9.2020 நாளிட்ட தீர்ப்பில் பூட்டி சீல் வைக்கப்பட்டதை அகற்ற ஆணையிட்டதின் அடிப்படையில் 30.9.2020 நாளன்று சீல் அகற்றப்பட்டது. மேலும், நகரமைப்பு விதிகளின்படி அனைத்து குடியிருப்புகளுக்கும் தாக்கீது வழங்கியதை எதிர்த்து, அனைத்து குடியிருப்புவாசிகளும் நீதிமன்ற வழக்கு தொடர்ந்ததை அடுத்து அமலாக்க நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. குடியிருப்புவாசியான K. ரேவதி தொடர்ந்த வழக்கு எண்.W.P.No.2101 of 2022ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தனது 22.2.2022 நாளிட்ட இடைக்கால ஆணையில் தற்போதைய நிலையை தொடர அறிவுறுத்தப்பட்டது. மேலும், மற்றொரு குடியிருப்புவாசிகளான திரு. A.V. பரமகுரு மற்றும் V.P. கீதாராணி ஆகியோர் தொடர்ந்த வழக்கு எண்.W.P.23782 of 2021 and WMP No.25045 of 2021ல், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 15.11.2021 நாளிட்ட இடைக்கால தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது.

"in respect of the same issue, Writ Petitions are pending in W.P.No.23889 of 2017 etc., batch of cases, before the First Bench of this court. It is also stated that in respect of the residential buildings, pending regularation applications, this court has granted interim order.

2. In view of the above, the respondents are directed to maintain status quo as on date.

3. Registry is directed to tag this petition along with W.P.No.23889 of 2017 etc., batch of cases after getting necessary orders from the Hon'ble the Chief Justice."

மேலும் இவ்வழக்கின் 12.7.2023 நாளிட்ட இறுதி தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது.

"2. The Government Order relied upon by the petitioners is already set aside by this court and now, the same is the subject matter of consideration before the Apex Court.

2. In view of that, directions sought by the petitioners cannot be given. After the Apex Court decides the matter, the parties are at liberty to take further steps."

மேற்கண்ட விவரங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13ன் மண்டல அலுவலர் கடித எண்.ம.அ.ந.க.எண்.4089/2023 நாள்:12.8.2023ன் உடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13ன் மண்டல அலுவலர் 12.8.2023 நாளிட்ட அறிக்கையில் தமிழக அரசின் விதிமீறல் கட்டடங்களை பிரிவு 113C தமிழ்நாடு நகர்புற (ம) ஊரக

நகரமைப்புச் சட்டம், 2017 விதிகளின்படி வரன்முறை செய்வது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின் அடிப்படையில் பிளாட் எண்.B9 A2 குரு காம்பளக்ஸ், திருவள்ளுவர் நகர், 2வது பிரதான சாலை, திருவான்மியூர், சென்னை – 41ல் அமைந்துள்ள கட்டிடத்தின் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில், திரு. A.போஜியா அவர்கள் இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ள புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள பொருட்பாடுகள் எதனையும், 2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு 10 (3) (b)ன் படி, இம்முறைமன்றத்தால் விசாரணை செய்ய இயலாது என்பதால், இந்நேர்வு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்து கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. A. போஜியா
H60/G4, நெய்தல் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை – 600 041.

2) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம்-13,பெருநகர சென்னை மாநகராட்சி,
115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,
அடையாறு, சென்னை – 600 020.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்